கேரளாவில் புதிய வைரஸ் காய்ச்சல் பரவி வரும் நிலையில், தமிழக அரசு உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில், அசுத்தமான நீரின் வாயிலாக பரவும் இந்த நோய், குழந்தைகளை தொற்றும் ஆபத்து அதிகமாக உள்ளதால், அரசு உரிய கவனம் செலுத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் அண்மையில் பெய்த கோடை மழை மற்றும் சூறைக்காற்றால் பாதிக்கப்பட்ட வாழை மரங்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கான நடைமுறைகளை மாநில அரசு தொடங்கியுள்ளது.

சேதமடைந்த பயிர்களை கணக்கீடு செய்யும் பணி தீவிரமாக நடைபெற்றது.

இந்த விவரங்கள் வருவாய் நிர்வாக ஆணையருக்கு அனுப்பப்பட்டுள்ளதாக தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

சமீபத்தில் பெய்த மழை மற்றும் சூறைக்காற்றால், மாநிலம் முழுவதும் வாழை, பப்பாளி, முருங்கை, மரவள்ளிக்கிழங்கு, கத்திரி உள்ளிட்ட பயிர்கள் சேதமடைந்தன.

<<<<<>>>>>

மேற்கு திசைக்காற்றின் வேக மாறுபாடு காரணமாக, தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதியிலும் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒரு சில பகுதிகளில் மாலை மற்றும் இரவில் இடிமின்னலுடன் கூடிய லேசான மழை பெய்யும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

அஸ்ஸாம் மாநிலத்தில் ஏற்பட்ட வெள்ளத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 64ஆக அதிகரித்துள்ளது.

<<<<<>>>>>

அமர்நாத்தில் உள்ள பனிலிங்கத்தை தரிசிக்க 5 ஆயிரத்து 800 பேர் கொண்ட மற்றொரு குழுவினர் ஜம்முவிலிருந்து புறப்பட்டுச் சென்றனர்.

<<<<<>>>>>

நீலகிரி மாவட்டம், கோத்தகிரி அருகே உள்ள கடைக்கோடி கிராமமான காரிக்கையூரில் மாவட்ட காவல்துறை சார்பில் பழங்குடியின மக்களுக்கு போதைப்பொருள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

<<<<<>>>>>

தூத்துக்குடி மாவட்டத்தில் கோவில்பட்டி, கடம்பூர் மற்றும் சாத்தான்குளம் ஆகிய பகுதிகளில் புதிய குற்றவியல் சட்டங்கள் தொடர்பாக காவல்துறையினர் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

<<<<<>>>>>

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில், ஆதிதிராவிடர் நல விடுதிகளில் சேர்வதற்கு மாணவர்கள் இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம் என்று ஆட்சியர் திரு. பிரசாந்த் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

விளையாட்டுச் செய்திகள்

இந்தியா - ஜிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 100 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஹராரேயில் நடைபெற்ற இப்போட்டியில், முதலில் விளையாடிய இந்தியா, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 2 விக்கெட் இழப்புக்கு 234 ரன் எடுத்தது.

அபிஷேக் சர்மா அற்புதமாக விளையாடி சதம் அடித்தார்.

